# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | STC No.657/2024 | Date: 20.11.2025 |
| Deposition of Witness for | : | பு.சா.1 | |
| Name | : | பச்சமுத்து | |

(எதிரி ஆஜர்).

**குறுக்கு விசாரணை :-**

1) நான் விவசாயம் செய்து வருகிறேன். எனது வருட வருமானம் ரூ.4 லட்சம் ஆகும். நான் இதே நீதிமன்றத்தில் சில காசோலை வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் RKM மெடிக்கல்ஸ் மகேஷ் என்பவர் மூலம் தெரியும். மகேஷ் எந்த ஊரை சார்ந்தவர் என்றால் சங்ககிரி RS பகுதியில் மெடிக்கல் வைத்துள்ளார். மகேஷ், சின்னாகவுண்டனூரில் உள்ள ராயலூரை சார்ந்தவர் என்றால் சரிதான். வழக்கின் எதிரியும் ராயலூரை சார்ந்தவர் என்றால் சரிதான்.

2) மகேஷ்க்கும், எதிரிக்கும் கொடுக்கல்/வாங்கம் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் எனது பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்வதற்கு முன்பே கடந்த 29-01-2025 ம் தேதியன்று எதிரி என்மீது அவரது காசோலைகளை மகேஷ் என்பவர் மூலம் மோசடியாக பெற்று வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி காசோலையை திரும்ப பெற்றுத்தருமாறு மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு புகார் அனுப்பிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் காவல்துறை மூலம் தகவல் தெரியும். மேற்படி, தகவல் தெரிந்து நான் மறுப்பு தெரிவித்து எதிரிமீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால்

சரிதான். மேற்படி, புகார் குறித்து நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3) இந்த வழக்கிற்கு முன்பு இந்த வழக்கில் கொடுத்ததாக சொல்லப்படும் கடன் தொகையை தவிர வேறு எந்த கடன் தொகையும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரியின் மனைவி பெயர் தெரியாது. எதிரியின் வீட்டிற்கு சென்றதில்லை. நான் எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லும் விவரம் எனக்கும், எதிரிக்கும் தவிர வேறு யாருக்கும் தெரியாது என்றால் சரியல்ல, மகேஷ்க்கு தெரியும். மகேஷ், என்பவர் சொல்லி தான் நான் எதிரிக்கு கடன் கொடுத்தேனா என்றால் இல்லை.

4) நான் கடன் கொடுத்தாக சொல்லப்படும் கடந்த 18-11-2023 ம் தேதியன்று எதிரிக்கு கடன் கொடுத்த விவரம் மகேஷ்க்கு தெரியாது என்றால் சரிதான். கடந்த 18-11-2023 ம் தேதியன்று எதிரி என்னிடம் கடன் கேட்டதாகவும், அன்றைய தினமே நான் கடன் தொகையை கொடுத்தாகவும் தான் இவ்வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் எதிரி என்னிடம் கடந்த 18-11-2023 ம் தேதிக்கு முன்னரே கடன் கேட்டார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தற்போது தான் நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் சரிதான்.

5) கடந்த 18-11-2023 ம் தேதிக்கு முன்னர் எதிரி என்னிடம் கடன் கேட்டதாக சொல்லும்போது எந்த தேதியில், எங்கு வைத்து கேட்டார் என்றால் மகேஷ் மெடிக்கல்லில் வைத்து கேட்டார், தேதி ஞாபகமில்லை. மெடிக்கல்லில் வைத்து கடன் கேட்டதற்கு பின்னிட்டு எதிரி என்னை சந்திக்கவில்லை என்றால் சரிதான். கடந்த 18-11-2023 ம் தேதி எதிரிக்கு எங்கு வைத்து கடன் கொடுத்தேன் என்றால் எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். இந்த வழக்கு காசோலையை தவிர வேறு

எந்த ஆவணமும் எதிரியிடம் இருந்து பெறவில்லை என்றால் சரிதான். வழக்கு காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்வதற்கு எத்தனை நாட்களுக்கு முன்னர் நான் கசோலையை பூர்த்தி செய்தேன் என்றால் எதிரியே பூர்த்தி செய்து வந்து கொடுத்தார்.

6) வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் ஒரு மையினாலும், மற்ற விவரங்கள் ஒரு மையினாலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் மெடிக்கல்லில் வைத்து எதிரி என்னிடம் கடன் கேட்டதற்கு பின்னிட்டு எதிரியை நான் சந்திக்கவே இல்லை என்றபோது, எதிரி கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியான கடந்த 18-11-2023 ம் தேதியன்று கடன் தொகையை நிரப்பி காசோலை கொடுத்தாக சொல்வது நம்பும்படி இல்லை என்றால் சரியல்ல. எதிரி வழக்கு காசோலை வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டு முதல்முறை திரும்பியபோது ஒரு மாதம் கழித்து மீண்டும் வசூலுக்கு தாக்கல் செய்யுமாறு எதிரி என்னிடம் எங்கு வைத்து கூறினார் என்றால் நான் தான் தொலைபேசியின் வாயிலாக எதிரிக்கு தெரிவித்தபோது, எதிரி கூறினார்.

7) நான் எதிரிக்கு தொலைபேசியில் அழைத்த தேதி தெரியுமா என்றால் காசோலை வசூலாகாமல் திரும்பிய மறுநாள் அழைத்தேன். அப்போது, எதிரி எங்கிருந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் நான் கேட்கவில்லை. எனது அலைபேசி எண் என்ன என்றால் 9443528740 ஆகும். எதிரிக்கு அழைத்த அலைபேசி எண் என்ன என்றால் 9092255522 ஆகும். நான் சொல்வது தவறு என்றும், நான் மேற்படி எதிரிக்கு அழைக்கவே இல்லை என்றும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

8) நான் எதிரியிடம் பேசியதாக சொல்லப்படும் காலத்தில் எதிரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றால் சரியல்ல. மகேஷ்க்கும், எதிரிக்கும் கொடுக்கல்/வாங்கல் சம்பந்தமாக பிரச்சனை இருந்தது என்றும், எதிரியின் தந்தைக்கும், மகேஷ்க்கும் இருந்த பண பரிவர்த்தனைக்கு பின்பு எதிரியின் தந்தை இறந்துவிட்டதால் மகேஷ்-டம் பிணையமாக கொடுத்த எதிரியின் காசோலையை பெற்று நான் மோசடியாக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**(எதிரியின் வழக்கறிஞர் கேட்டுகொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).**

Sd/-S.Sathiya,

Sd/-Pachamuthu

Judicial Magistrate No.1,
Sankari.